Commercial Taxes and
Registration (M1) Department,
Secretariat, Chennai - 9

**Letter No.6666/M1/2020-2, dated 27.10.2020**

From
Dr (Tmt) Beela Rajesh, I.A.S.,
Secretary to Government.

To
The Inspector General of Registration,
Chennai-28.

31 OCT 2020

Madam,

Sub: Tamil Nadu Societies Registration Act, 1975 – Meetings of the registered societies not able to be convened due to spread of COVID-19 viral infection and lockdown measures imposed – Requesting alternative methods of holding meetings – Regarding.

Ref: From the Inspector General of Registration letter No.19919/I1/ 2020, dated 18.08.2020.

*****

I am directed to invite attention to the reference cited and to state that certain societies have requested permission from the Government to conduct Annual General Meeting under the Tamil Nadu Societies Registration Act, 1975 through virtual means in view of COVID-19 viral out break and the resulted lockdown.

2. In this connection, I am to state that the existing provision in Sub-section (3) of section 26 of the said Act neither requires physical presence of persons nor specifies a particular place for conducting the said meeting and hence, there is no bar to conduct annual general meeting through virtual or electronic platforms, that is through video conferencing or other audio visual means. In this regard, I am to request you to issue necessary instructions to the District Registrars concerned to inform the said position to such societies which request/require permission to conduct Annual General Meeting for the year 2019-2020 through virtual means to meet out the statutory requirements under the Tamil Nadu Societies Registration Act, 1975, in view of COVID-19 viral out break and the resulted lockdown. A copy of the instructions issued in this regard may be furnished to Government for reference.

Yours faithfully,

for Secretary to Government.
28/10/2020

Verified RealEstate TM

//பதிவுத்துறை//

**அனுப்புநர்**

பதிவுத்துறை தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை – 28.

**பெறுநர்**

அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்
(நிர்வாகம்)

ந.க.எண்.19919/ஐ1/2020 நாள்.31.10.2020.

ஐயா /அம்மையீர்,

**பொருள்:** சங்கப் பதிவுச் சட்டம் 1975 – COVD 19 பெருந்தொற்று காரணமாக வருடாந்திர கூட்டங்கள் கூட்ட இயாலாமை – மாற்று வழியில் கூட்டம் நடத்திட கோரியமை – தொடர்பாக.

**பார்வை:**
1. G.O.No.89 வணிகவரி மற்றும் பதிவுத்துறை நாள்.16.06.2020.
2. அரசுக் கடித எண்.6666/எம்1/2020-2 நாள்.27.10.2020.

*****

தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் பிரிவு 26-ன்படி ஆண்டு தோறும் சங்கப் பொதுக்குழு கூட்டம் கூட்டப்பட வேண்டும். தற்போது கொரானா பெருந்தொற்று தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக சங்கங்களின் பொதுக்குழு கூட்டங்கள் நடத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக பல்வேறு சங்கங்களில் இருந்து இணைய வழி பொதுக்குழு கூட்டம் நடத்திட கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

இப்பொருள் தொடர்பாக பார்வை 2-ல் காணும் அரசுக் கடித்தில் இணைய வழி சங்கப் பொதுக்குழு கூட்டம் நடத்திட அனுமதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இணைய வழி சங்க கூட்டம் நடத்துவது தொடர்பாக கீழ்காணும் வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன.

1. இணையவழி கூட்டம் நடத்திட அனுமதி கோரும் சங்கங்களுக்கு 2019-2020 ஆண்டுக்கான பொதுக்குழுவினை மட்டும் இணைய வழியாக நடத்திட சங்கப்பதிவாளர்கள் அனுமதி வழங்கலாம்.

Verified RealEstate ™

2. அவ்வாறு இணைய வழி கூட்டம் நடத்தப்படும் நிகழ்வில் கூட்டத்தின் நிகழ்வு முழுவதையும் வீடியோ பதிவு செய்து திருத்தம் செய்யப்படாத இரண்டு குறுந்தகடுகளில் சேமிக்கப்பட்டு சங்கப்பதிவாளருக்கு கோர்வைக்கு தாக்கல் செய்யப்படும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும். கூட்ட நிகழ்வு முழுமையாக திருத்தம் செய்யப்படாத ஒளி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு குறந்தகட்டில் சேமித்து வழங்கப்பட வேண்டும். (unedited Video and Audio recording of the whole proceedings should be produced in DVD)

3. ஆள் மாறாட்டம் ஏதும் நடைபெறாத வண்ணம் தகுந்த சரிபார்ப்பு / பாதுகாப்பு நடவடிக்கைகள் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட வேண்டும். பொதுக்குழு மற்றும் தேர்தல் நடத்தும் போது சங்கத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் LOGIN ID, PASSWORD, LINK அளிப்பது சங்க நிர்வாகிகளின் கடமையாகும். தவறும் பட்சத்தில், இதனால் ஏற்படும் புகார்களுக்கு சங்கமே பொறுப்பேற்க வேண்டும். சங்கப்பதிவாளர் பொறுப்பாக மாட்டார்.

4. இவ்வாறான இணையதள வழி கூட்டம் நடத்துவதற்கான அனுமதியானது தற்போது நிலவும் கோவிட் - 19 பெருந்தொற்று பரவலை தடுக்கும் நோக்கில் வழங்கப்படுகிறது. இந்த அனுமதி 2019-20 நிதியாண்டுக்கு நடத்தப்படும் பொதுக்குழு கூட்டத்திற்கு மட்டுமே பொருந்தும்.

ஒம்/- 31.10.2020.
பதிவுத்துறை தலைவர்.

/ஆணையின்படி/

2/11/20
கூடுதல் சீட்டுப்பதிவாளர்.

நகல்

1. அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள்.
2. இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம், சென்னை.

Verified RealEstate™

//பதிவுத்துறை//

**அனுப்புநர்**

பதிவுத்துறை தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை – 28.

**பெறுநர்**

அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்
(நிர்வாகம்)

ந.க.எண்.19919/ஐ1/2020 நாள். 07.11.2020.

ஐயா /அம்மையீர்,

பொருள்: சங்கப் பதிவுச் சட்டம் 1975 – COVID 19 பெருந்தொற்று காரணமாக வருடாந்திர கூட்டங்கள் கூட்ட இயாலாமை – மாற்று வழியில் கூட்டம் நடத்திட கோரியமை – வழிகாட்டுதல்கள் - தொடர்பாக.

பார்வை:
1. G.O.No.89 வணிகவரி மற்றும் பதிவுத்துறை நாள்.16.06.2020.
2. அரசுக் கடித எண்.6666/எம்1/2020-2 நாள்.27.10.2020.
3. பதிவுத்துறைத்தலைவர் கடித எண்.19919/ஐ1/2020 நாள்.31.10.2020

*****

பார்வை 3ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் 2019-2020 ஆண்டுக்கான பொதுக்குழுவினை இணையவழி நடத்திட அனுமதி கோரும் சங்கங்களுக்கு அனுமதி அளித்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இணையவழி சங்க கூட்டம் நடத்துவது தொடர்பான வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு இணையவழி சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் நடத்திட அனுமதி கோரும் சங்கத்தினருக்கு அனுமதி அளிக்கும் நிகழ்வில் பார்வை 3ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 முதல் 4 வரையிலான வழிகாட்டுதல்களை முழுமையாக குறிப்பிட்டு அனுமதி கடிதம் வழங்கிடலாம் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-07.11.2020
பதிவுத்துறைத்தலைவர்

/ஆணைப்படி/

கூடுதல் சீட்டுப்பதிவாளர்

நகல்
1. அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள்.
2. இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம், சென்னை.

Verified RealEstate ™